செ.வெ.எண்: 31/2021 நாள்: 26.05.2021

**பத்திரிகை செய்தி**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று ( 26.05.2021) கொரோனா வைரஸ் தடுப்பு பணி நடவடிக்கைக் குறித்து அரசு அலுவலர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை (இயக்குநர்) மரு.தி.சி.செல்வவிநாயகம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் அலுவலர்களுக்கு கருத்துரை வழங்கி தெரிவிக்கையில்:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க கொரோனா நடவடிக்கை பணி குறித்து இன்று தென்காசி மாவட்டத்தில் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகள், கொரோனா பராமரிப்பு சிகிச்சை மையம் போன்ற பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டேன். ஆய்வு மேற்கொண்டதில் கொரோனா தடுப்பு பணி நடவடிக்கையானது தென்காசி மாவட்டம் சிறப்பான பணியை செயல்படுத்தி வருகிறது. தென்காசி மாவட்டம் புதிய மாவட்டமாக இருந்தாலும், கொரோனா தடுப்புப்பணி நடவடிக்கை பணியில் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக 1256 முன்கள பணியாளர்கள், மற்றும் தன்னார்வலர்கள் மூலம் வீடுகள் தோறும் காய்ச்சல் கணக்கெடுக்கும் பணி எடுப்பவர்களுக்கு முதற்கட்டமாக 500 பல்ஸ் ஆக்ஸியோ கருவி மூலம் அவர்களின் ஆக்ஸிஜன் அளவை கண்டறிவதற்கு கருவி வழங்கப்பட்டுள்ளது. தென்காசி அரசு மருத்துவமனையில் 70 ஆக்ஸிஜன் இல்லா படுக்கைகள் மற்றும் 63 ஆக்ஸிஜன் படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆய்க்குடி நல்லமணி யாதாவா மகளிர் கல்லூரியில் பிரத்யோக சித்த மருத்துவ கோவிட் கேர் சென்டர் திறக்கப்பட்டு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது, வாசுதேவநல்லூர் தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் இயற்கை மருத்துவம் கொரோனா சிகிச்சை மையம் திறக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே இயற்கை மருத்துவம் சிகிச்சையளித்து வருவது தென்காசி மாவட்டம்தான். ஒருங்கிணைந்த கட்டளை மைய கட்டுப்பாட்டு அறையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் தொடங்கிய மறுதினமே தென்காசி மாவட்டத்தில் துவங்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவது சிறப்பம்சம் ஆகும். மேலும், அனைத்து வட்டாரப்பகுதிகளிலும் கட்டுப்பாட்டு அறை அமைத்து கொரோனா நோயாளிகளுடன் தொடர்புடைய நபர்களை சிறப்பாக கண்காணித்து வருகிறது.

கொரோனா பாதிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சிறப்பாக தனியாக 2 இடங்களில் கொரோனா பராமரிப்பு மையம் அமைத்து சிறந்து முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், முழு ஊரடங்கில் ஆதரவற்றவர்களுக்கு தன்னார்வலர்கள் மூலம் இலவச உணவு வழங்கப்பட்டு ecrc மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் 1 ½ கிலோ லிட்டர் ஆக்ஸிஜன் கொள்ளவை 5 கிலோ லிட்டராக அதிகரிக்கவும், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் புதிதாக 5 லிட்டர் கொள்ளவு கொண்ட திரவ ஆக்ஸிஜன் கிடங்கு நிறுவுவதற்கு பணி மேற்கொள்ளப்படும். ஆர்டிபிசியல் பரிசோதனை ஆய்வகம் மாவட்டத்தில் 2 இடங்களில் உள்ளது. எனவே குறைந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதால் கூடுதலாக பரிசோதனை மேற்கொள்வதற்காக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் புதிதாக ஆர்டிபிசியல் பரிசோதனை ஆய்வகம் நிறுவதற்கு பணி மேற்கொள்ளப்படும்.

சிவகிரி, கடையநல்லூர், புளியங்குடி, ஆலங்குளம் அரசு மருத்துவமனைகளுக்கு ஆக்ஸிஜன் விநியோகம் செய்வதற்கு ஒருங்கணைந்த ஆக்ஸிஜன் குழாய் அமைப்பதற்கு பணி மேற்கொள்ளப்படும். நீண்டநாள் கோரிக்கையான மாவட்டத்திற்கு புதிய மருத்துவ கல்லூரி நிறுவுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மருத்துவ கல்லூரி அமைப்பதற்கு வழியுறுத்தப்படும்.

கடந்த ஒருவார காலத்திற்கு முன்பு ஆக்ஸிஜன் தேவைகள் அதிகமாக தேவைபட்டிருந்தது. தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிரிய முயற்சியால் மாண்புமிகு பாரத பிரதமரிடம் வழியுறுத்தி இரவு பகல் என்று பாராமல் வட மாநிலங்களில் இருந்து ஆக்ஸிஜன் வரவழைத்து

போதுமான அளவு தட்டுப்பாடின்றி கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 18 வயது முதல் 44 வயது உள்ளவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி போடுவதற்கு முகாம் அமைக்கப்பட்டு போடப்பட்டு வருகிறது. தற்போது வரை 75 இலட்சம் தடுப்பூசி பொது மக்களுக்கு போடப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசிடமிருந்து 70 இலட்சம் தடுப்பூசிகள் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். தோடர்ந்து 3 ½ கோடி தடுப்பூசி வாங்குவதற்காக உலகளவில் டென்டர் அமைத்து 6 மாத காலத்துக்குள் தடுப்பூசியை பெறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் முலம் தமிழ்நாட்டில் தடுப்பூசி போடாதவர்கள் எவருமே இல்லை என்ற தமிழகம் உருவாகும், ஆகையால் அரசு எடுக்கும் தடுப்பு பணி நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். மேலும், ஒவ்வொரு மருத்துவமனை நுழைவாயில் may I help you அரங்கம் அமைத்து தன்னார்வலர்களை கொண்டு கொரோனா பாதிப்பு பற்றிய சந்தேகங்களை விளக்க வேண்டும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளிகளுக்கு 10 அல்லது 15 தற்காலிக (0 delay ward) ஆக்ஸிஜன் படுக்கைகள் தயார் நிலையில் வைத்து அவர்களுக்கு முதலுதவி வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் கடந்த வாரம் 36 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கொரோனா பாதிப்பு உள்ளதை கண்டறியப்பட்டுள்ளது. தற்பொழுது படிபடியாக கொரோனா பாதிப்பு குறைய தொடங்கியுள்ளதால் தளர்வுகளற்ற முழு ஊரடங்கினால் பெரிய அளவில் வெற்றி கிடைத்துள்ளது.

மேலும், அரசு அலுவலர்களும், பொதுமக்களும் கூடுதல் கவனம் செலுத்தி கொரோனா இல்லாத தென்காசி மாவட்டமாக மாற்ற அனைவரும் முனைப்புடன் மக்கள் சக்தியாக மாறி கொரோனாவை ஒழிப்பதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக குருக்கள்பட்டியில் 18 வயது முதல் 44 வரை உள்ள பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி முகாமினை துவக்கி வைத்து, வீட்டிலேயே தனிமையில் உள்ளவர்களுக்கு ஆக்ஸிஜன் அளவை கண்டறிவதற்காக முன்கள பணியாளர்களுக்கு பல்ஸ் ஆக்ஸியோ கருவியினை வழங்கியும், முகாம் நடைபெறும் இடங்களில் மருத்துவ குழுக்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒலிப்பெருக்கி கருவியை மருத்துவ குழுக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி முதன்மை செயலாளர் சுகாதாரத்துறை மரு.ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை (இயக்குநர்) மரு.தி.சி.செல்வ விநாயகம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் வழங்கினார்.

தொடாந்து வடக்கு புதூர் கொரோனா சிகிச்சை மையம், முத்துசாமி புரம் கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகள், தங்கப்பழம் பாலிடெக்னிக் கொரோனா சிகிச்சை மையம், சொக்கம்பட்டியில் கொரோனா பாதிக்கப்பட்ட கர்ப்பிணி மற்றும் தாய்மார்களை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ் எம்.குமார் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலர் திரு.சுகுணாசிங் இ.கா.ப., அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ராஜா அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சதன் திருமலைக்குமார் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் அவர்கள், ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எச்.மனோஜ் பாண்டியன் அவர்கள், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.கிருஷ்ணமுரளி அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ஜனனி சௌந்தர்யா, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திரு.சரவணன், இணை இயக்குநர் நலப்பணிகள் மரு. நெடுமாறன், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.யோகானந்த், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் திருமதி.உஷா, அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**